<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 140/2016 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | மணி | நாள் | 27.03.2025 |
| தகப்பனார் பெயர் | அழகப்பன் | | |

<u>பிரதிவாதி தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை :–</u>

1) என் பிரமாண பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால், தெரியும். 1ம் வாதி ரமா யார் என்றால், அவர் பச்சைமுத்து என்பவரின் மகள் ஆவார். மேற்படி பச்சைமுத்து என்பவர் என் உடன் பிறந்த சகோதரர் என்றால், சரிதான். 2ம் வாதி பரமேஸ்வரி என் அன்னி என்றால், சரிதான். வாதிகள் எந்த சர்வே எண்ணிற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால், ச.எண்.851/17 என்ற சர்வே எண்ணின் மீது தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். சர்வே எண்.851/18 ன் மீது இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லையா என்றால், தாக்கல் செய்யவில்லை.

2) சர்வே எண்.851/18 என்பது வில்லை வீடு என்றால், சரிதான். அதில் தான் வாதிகள் குடியிருக்கிறார்களா என்றால், ஆமாம். மேற்படி வீட்டினை ஒட்டி கிழமேலாக ஒரு சந்து போகிறது என்றால், சரியல்ல. அங்கு சந்து இல்லை. ஆனால், வருவாய் துறை ஆவணங்களில் மேற்படி பகுதியானது பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அது தவறானது. மேற்படி பாதையின் வழியாகத்தான் வாதிகளின் வீட்டிற்கு பின்புறம் அமைந்துள்ள இதர வீடுகளுக்கு தடவழி உள்ளது என்றால், சரியல்ல. நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி பாதை தான் அங்கு உள்ளவர்களுக்கு தடவழி என்றாலும், அதை வாதிகள் தடுத்து இடையூறு செய்கிறார்கள் என்றாலும், சரியல்ல.

3) வாதிகளின் வீட்டிற்கு பின்புறத்தில் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால், சரிதான். அவ்வாறு பிரதிவாதி பயன்படுத்திவரும் தடவழியை தடுத்தால் அது குறித்து பிரதிவாதி வாதிகளிடம் கேட்டபோது தான் வாதிகள் தகராறு செய்து தவறான சங்கதிகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால், சரியல்ல. சர்வே எண்.851/18 ல் உள்ள

வீட்டிற்கு பட்டா உள்ளதா என்றால், உள்ளது. சர்வே எண்.851/17 ல் உள்ள நிலத்திற்கு வாதிகள் பட்டா வாங்க முயற்சித்தபோது அது சந்து என்பதால் தான் வருவாய் துறையால் மேற்படி பகுதிக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றால், சரியல்ல.

4) அவ்வாறு வருவாய் துறையினர் பட்டா வழங்க மறுத்ததால், 2ம் வாதி மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த 2011ம் வருடத்தில் தனக்கு பட்டா வழங்கக்கோரி ஒரு நீதிபேராணை மனு தாக்கல் செய்தார் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி 2ம் வாதி மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நீதிபேராணை மனு மேற்படி நிலம் பாதை என்பதால், பட்டா வழங்க இயலாது என கூறி, கடந்த 09.09.2011ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், அது குறித்தும் எனக்கு தெரியாது.

5) பின்னிட்டு, மேற்படி பாதையை வாதிகள் தொடர்ந்து தடுத்து வந்ததால், அது குறித்து பிரதிவாதி மேட்டுர் வட்டாட்சியரிடம் மனு அளித்தார் என்றால், சரிதான். மேற்படி மனுவின் பேரில் கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் சர்வேயர் ஆகியோர் மேற்படி பிரச்சனைக்குரிய சொத்தை அளக்க வந்தார்கள் என்றால், சரிதான். அவ்வாறு அளக்க வந்தபோது என் அண்ணனும், என் அன்னியும் அவரது மற்றொரு மகளும் தடுத்ததாக கூறி, கிராம நிர்வாக அலுவலர் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர் என்றால், சரிதான்.

6) மேற்படி புகாரின் அடிப்படையில் கருமலைக்கூடல் போலீசார்வழக்கு பதிவு செய்து, மேட்டுர் குற்றவியல் நீதிதுறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி வழக்கில் என் அண்ணன் பச்சமுத்து, மற்றும் என் அன்னி பரமேஸ்வரி ஆகியோர் நீதிமன்றத்தால், குற்றவாளிகள் என தீர்மானிக்கப்பட்டனர் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. சர்வே எண்.851/17 தொடர்பாக வாதிகள் தங்கள் பெயரில் ஏதேனும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனரா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

7) சர்வே எண்.851/17 ஆனது, தங்களுக்கு தான் சொந்தமானது என்பதை காண்பிக்க வாதிகள் இந்நீதிமன்றத்தில் எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால், தாக்கல் செய்துள்ளதாக சொன்னார்கள். நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு மேற்படி சர்வே எண்.851/17 தங்களுக்கு சொந்தமானது என்பதை காண்பிக்க வாதிகள் எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரியல்ல. மேற்படி பாதையை பிரதிவாதி பயன்படுத்துவதற்கு வாதிகள் இடையூறு செய்கிறார்கள் என்றாலும், இவ்வழக்கில் நான் வாதிகள் என் உறவினர்கள் என்பதால், அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.